**செ. கு. எண்:084** **நாள்: 13.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 13.6.2017

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி கிராமம், பொள்ளாச்சி – பாலக்காடு தேசிய நெடுஞ்சாலையில் நல்லூர் பேருந்து நிறுத்தம் அருகில் 12.1.2017 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் திரு லோகநாதன் என்பவரின் மகன் திரு கலைச்செல்வன், திரு ராமசாமி என்பவரின் மகன் திரு கார்த்திக் மற்றும் திரு முருகேசன் என்பவரின் மகன் திரு சௌந்தர்யன் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், அச்சன்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு பன்னீர் செல்வம் என்பவரின் மகன் திரு மகேஷ் என்பவர் 13.1.2017 அன்று குழல் விளக்கு பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், டி.கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு காத்தமுத்து என்பவரின் தாயார் திருமதி வைரம்மாள் என்பவர் 7.2.2017 அன்று வீட்டின் கூரை இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சண்முகசுந்தரி என்பவரின் கணவர் திரு செந்தில்குமார் என்பவர் 16.4.2017 அன்று கடலில் குளிக்கும் போது மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சலங்கபாளையம் ஆ கிராமத்தைச் சேர்ந்த திரு பழனிசாமி என்பவரின் மகன் திரு ஈஸ்வரன் என்பவர் 17.4.2017 அன்று அரசுப் பேருந்து மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 19.4.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கந்தவர்கோட்டை வட்டம், வாடித் தெருவைச் சேர்ந்த திரு முருகேசன் என்பவரின் மகன் திரு வெங்கடேஷ், திரு ரெங்கராஜ் என்பவரின் மகன் திரு. வீரமணி மற்றும் திரு லோகநாதன் என்பவரின் மகன் திரு சிவா ஆகிய மூன்று பேரும் 30.4.2017 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு. கலைச்செல்வன், திரு கார்த்திக், திரு சௌந்தர்யன், திரு. மகேஷ், திருமதி வைரம்மாள், திரு. செந்தில்குமார், திரு. ஈஸ்வரன், திரு. வெங்கடேஷ், திரு. வீரமணி மற்றும் திரு. சிவா ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**